அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# பண்டாரவாடை வளைகுடா சமூக சேவை அமைப்பு

ஐக்கிய அரபு அமீரகம்

## வட்டியில்லா கடன் திட்டத்தின் விதிமுறைகள்

- இத்திட்டம் பண்டாரவாடை வளைகுடா சமூக சேவை அபைப்பினால் தொடங்கப்படும் திட்டமாகும்.
- இத்திட்டம் அல்லாஹ்வின் நன்மையை நாடி வழங்கப்படும் வட்டியில்லா கடன் திட்டமாகும்.
- இதில் உறுப்பினராக சேருபவர் நமதூரில் வாழ்பவராக இருத்தல் வேண்டும். உறுப்பினர்கள் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து கொடுக்கவேண்டும். (விபரம் விண்ணப்ப படிவத்தில் இருகின்றது)
- இத்திட்டத்தில் சேரும் உறுபினர்களுக்கு ஒரு சேமிப்பாகவும், பிறருக்கு உதவி செய்த நன்மையும் கிடைக்கும் இன்ஷா அல்லாஹ்.
- உறுப்பினர்கள் மாத மாதம் குறைந்தது 100 திர்ஹம், அதிகபட்சம் எவ்வளவு வேண்டுமானாலும் கட்டலாம்.
- ஒவ்வொரு மாதமும் இரண்டாவது வெள்ளிக்கிழமை கூட்டம் நடைபெறும். இதில் உறுப்பினர்கள் கலந்து கொள்ளலாம். அதில் அந்த மாததின் சேமிப்பு தொகையை செலுத்தவேண்டும்.
- கடன் வாங்குபவர்கள் கண்டிப்பாக நமதூரை சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும்.
- கடன் பெறுபவர்கள், கடன் பெறுவதற்கான விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அத்துடன் ஒரு புகைப்படமும், சான்றாக அவர்களின் ID COPY அல்லது PP COPY இணைத்து கொடுக்க வேண்டும்.
- கடன் பெறுபவர்கள் இத்திட்டத்தில் உறுபினராக உள்ள ஒருவரிடம் ஜாமீன் கையெழுத்து வாங்கி கொடுக்கவேண்டும். கடன் பெறுபவர் கண்டிப்பாக நேரில் வந்து தான் பெற்றுக் கொள்ளவேண்டும்.
- கடன் தொகை குறைந்தபட்சம் திர்ஹம் 1000 த்திலிருந்து அதிகபட்சமாக திர்ஹம் 2500/- வரை கடன் வழங்கப்படும். கடன் தொகையை பொறுத்து மாத தவணை தொகை நிர்ணயிக்கப்படும்.
- ஒரு முறை கடன் பெற்றவர் மறு கடன் பெற காலக்கெடு 5 மாதமாகும்.
- பிரதி மாதம் இரண்டாம் வெள்ளி கிழமை நடக்கும் கூட்டத்தில் கடன் பெறலாம்.
- கடன் வழங்கும் அதிகாரம் தலைமைக் குழுவிற்கே உண்டு. கடன்தாரரின் விண்ணப்பத்தை நிராகரிக்கும் உரிமை தலைமைக்கு உண்டு.
- உறுப்பினர்கள் கடன் வாங்கவேண்டும் என்றால் அவர்கள் சேமிப்பில் குறைந்தபட்சம் திர்ஹம் 1000 இருந்தால் ஜாமீன் தேவை இல்லை. அதற்கு குறைவாக இருந்தால் கண்டிப்பாக ஒருவரின் ஜாமீன் தேவை.
- உறுபினர்கள் எப்பொழுது வேண்டுமென்றாலும் தாங்கள் சேமித்த தொகையை பெற 15 நாள் முன்பு அறிவிப்பு செய்து அடுத்த கூட்டத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- ஒரு நபருக்கு ஒருவர் மட்டுமே ஜாமீன் கொடுக்க முடியும்.


| நைனா முஹம்மது | ஹபீப் முஹம்மது | ஷாகுல் ஹமீது | முஹம்மது இல்யாஸ் | நஜ்முதீன் |
|---|---|---|---|---|
| 050 7784064 | 050 7580296 | 050 4225311 | 055 9828660 | 055 2834123 |